சின்னச் சின்னதாய்...

தொடர் குற்றங்களில் ஈடுபட்ட 3 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் அடைப்பு

● **கோவை**

கோவை பெரியநாயக்கன்பாளையத்தைச் சேர்ந்தவர் ரேணுகா (40). கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இவர், கொலை செய்யப்பட்டார். இதுதொடர்பாக பெரியநாயக்கன்பாளையம் போலீஸார் வழக்கு பதிந்து விசாரித்து, அதே பகுதியை சேர்ந்த சதீஷ் (34) என்பவரை கைது செய்தனர். இவர், கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

இதேபோல் மதுக்கரை பகுதியில் கஞ்சா விற்றதாக ராஜேந்திர பிரசாத் (64) என்பவரை கடந்த சில நாட்களுக்கு முன்னர் மதுக்கரை போலீஸார் கைது செய்து மத்திய சிறையில் அடைத்தனர்.

இதேபோல கேரள மாநிலத்தை சேர்ந்தவர் முருகன் (69). இவர், 12 கிலோ கஞ்சா விற்பனைக்காக வைத்திருந்ததாக கடந்த சில நாட்களுக்கு முன்னர், தடாகம் போலீஸாரால் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து பொதுஒழுங்கு மற்றும் பொது சுகாதாரப் பராமரிப்புக்கு பாதகமான செயல்களில் ஈடுபட்டு வந்ததால், 3 பேரையும் குண்டர் தடுப்புப் பிரிவில் அடைக்க உத்தரவிடுமாறு மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடியிடம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பத்ரிநாராயணன் பரிந்துரைத்தார். ஆட்சியர் உத்தரவின்பேரில், சதீஷ், ராஜேந்திர பிரசாத், முருகன் ஆகிய 3 பேரும் குண்டர் தடுப்புச் சட்டத்தில் அடைக்கப்பட்டனர்.

உரிமையாளரை 'நோட்டம்' விட்டு இருசக்கர வாகன திருட்டில் ஈடுபட்ட இருவர் கைது

● **கோவை**

கோவை உக்கடம் புல்லுக்காடு பகுதியைச் சேர்ந்தவர் நிவேதா. இவர், சில தினங்களுக்கு முன்னர், புல்லுக்காடு சாலையில் செல்போனில் பேசிக்கொண்டிருந்தபோது அவ்வழியாக வந்த இருவர் அவரது செல்போனை பறித்துச் சென்றனர். இதுகுறித்து கடைவீதி போலீஸார் வழக்குப்பதிந்து விசாரித்தனர். அதில், செல்போன் பறிப்பில் ஈடுபட்டவர்கள் தெலுங்குபாளையத்தைச் சேர்ந்த ராம்குமார்(29), சரவணன்(26) ஆகியோர் எனத் தெரியவந்தது. இவர்களை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இதுகுறித்து போலீஸார் கூறியதாவது:

கைதானவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், இருசக்கர வாகனத் திருட்டிலும் தொடர்பிருப்பது தெரியவந்தது. 6 மாதங்களுக்கு முன்பு சிறையில் இருந்து வெளியே வந்துள்ளனர். இருவரும், ஆர்.எஸ்.புரம், காந்திபுரம், சிங்காநல்லூர், கணபதி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சாலையோரங்களில் நிறுத்தப்பட்டிருந்த 10–க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்களைத் திருடியுள்ளனர்.

ஒருவர் வாகனத்தை நிறுத்திவிட்டுச் சென்றால், அவர் உடனே திரும்பி வருகிறாரா அல்லது தாமதமாகுமா என்பதை அறிய ராம்குமார் அவரை பின் தொடர்ந்து செல்வார். அவரது நடவடிக்கைகளை சரவணனுக்கு செல்போன் மூலம் தெரிவிப்பார். அதற்குள் சரவணன் அவரது வாகனத்தை திருடிவிட்டு அங்கிருந்து தப்பி விடுவார். இவர்கள் பயணிகள் கூட்டமாக இருக்கும் பேருந்துகளில் ஏறி நகை, பணத்தையும் திருடியுள்ளனர், என்றனர்.

கோவையில் ஆங்கிலத்தில் இருந்த ஆவின் பெயர்ப்பலகை தமிழில் மாற்றம்

● **கோவை**

கோவை ஆர்.எஸ்.புரம் பால் கம்பெனி பகுதியில் அமைந்துள்ள ஆவின் பாலகத்தில் தமிழ் வளர்ச்சித்துறையினர் கள ஆய்வு மேற்கொண்டனர். அதில், ஆவின் பாலகத்தின் இரண்டு புறங்களிலும் ஆங்கிலத்தில் மட்டுமே பெயர்ப்பலகை வைத்து தமிழில் பெயர்ப்பலகை இல்லாதது தெரியவந்தது.

மேலும், அரசாணையின் விதிகளுக்குட்பட்டு பெயர்ப் பலகையினைத் தமிழில் விரைந்து மாற்றிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும், 'ஆவின் ஹை–டெக் பார்லர்' என்பதை தமிழில் 'ஆவின் உயர்நுட்பப் பாலகம்' என்று உடன் மாற்றி அமைக்கும்படியும் ஆவின் பொதுமேலாளர், உதவி பொதுமேலாளர் ஆகியோரிடம் தமிழ் வளர்ச்சித்துறை அலுவலர்களால் வலியுறுத்தப்பட்டது.

மேலும், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர், ஆவின் மேலாண்மை இயக்குநருடன் செல்போனில் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டு கொண்டார். அதைத்தொடர்ந்து, உடனடியாக 'ஆவின் உயர்நுட்ப பாலகம்' என்று தமிழில் பெரிய எழுத்துருவில் பெயர்ப்பலகை மாற்றப்பட்டது. கோவை மாவட்டம் மட்டுமில்லாமல் அனைத்து மாவட்டங்களிலும் இதேபோல் துரித நடவடிக்கை மேற்கொள்வதாக ஆவின் மேலாண்மை இயக்குநர் உறுதியளித்தார். இதுகுறித்து தமிழ் வளர்ச்சி இயக்குநர் ந.அருள் கூறும்போது, "அரசு நிறுவனங்கள் விரைந்து பெயர்ப் பலகைகளைத் தமிழில் மாற்றுவதைப் போல வணிக நிறுவனங்களும் தங்களின் பெயர்ப்பலகைகளைத் தமிழில் மாற்றி அமைத்து தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்" என்றார்.

குப்பை அகற்றப்படாதது குறித்து

கேள்வி எழுப்பிய இளைஞர் மீது தாக்குதல்

● உரிய நடவடிக்கை எடுக்க மத்திய இணையமைச்சர் எல்.முருகன் வலியுறுத்தல்

● **மேட்டுப்பாளையம்**

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட 23-வது வார்டு ரயில்வே காலனி பகுதியில், கடந்த 3 மாதங்களுக்கும் மேலாக தூய்மைப் பணிகள் சரிவர மேற்கொள்ளப்படவில்லை எனக் கூறப்படுகிறது. இதனால் அப்பகுதி முழுவதும் குப்பை தேங்கி, சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து அப்பகுதியை சேர்ந்த இளைஞர் கவுதம் என்பவர், 23-வது வார்டு காங்கிரஸ் கட்சியின் கவுன்சிலர் கவிதா புருஷோத்தமனிடம் புகாரளித்துள்ளார். ஆனால், நடவடிக்கை எதுவும் இல்லாததால், அவர் மேட்டுப்பாளையம் நகராட்சியில் புகார் அளித்தார்.

↑ கவுன்சிலர் மற்றும் அவரது குடும்பத்தினர் தாக்கியதில் காயமடைந்த இளைஞர் கவுதம்.

அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் அப்பகுதியில் தூய்மைப் பணியாளர்கள், துப்புரவுப் பணிக்காக வந்துள்ளனர். அப்போது கவுன்சிலர் கவிதா, அவரது கணவர் புருஷோத்தமன், அவரது மகன் ஆகியோர் அங்கு வந்துள்ளனர். இங்கு தூய்மைப் பணிகளை மேற்கொள்ளக்கூடாது எனக் கூறியதுடன் அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

ஒரு கட்டத்தில் கவுன்சிலரின் கணவர் உள்ளிட்டோர் கவுதமை தாக்கியுள்ளனர். இதில் கழுத்து எலும்பில் முறிவு ஏற்பட்டு கவுதம் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து காயமடைந்த கவுதம் அளித்த புகாரின் பேரில், கவுன்சிலர் கவிதா, அவரது கணவர் புருஷோத்தமன், மகன் கார்த்திக், நண்பர் நசீர் ஆகியோர் மீது மேட்டுப்பாளையம் போலீஸார் வழக்கு பதிந்துள்ளனர்.

அதேபோல், கவுன்சிலர் கவிதா அளித்த புகாரின் பேரில், இளைஞர் கவுதம், அவரது தாயார் ஆகியோர் மீதும் போலீஸார் வழக்கு பதிந்து விசாரிக்கின்றனர்.

இவ்விவகாரம் தொடர்பாக மத்திய இணையமைச்சரும், நீலகிரி மக்களவைத் தொகுதி பாஜக வேட்பாளருமான எல்.முருகன் வெளியிட்ட அறிக்கையில், 'மேட்டுப்பாளையம் 23-வது வார்டு ரயில்வே காலனி பகுதியில் கடந்த ஆறு மாத காலமாக தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப் படவில்லை. இதனால் அப்பகுதியை சேர்ந்த இளைஞர் கவுதம் மேட்டுப்பாளையம் நகராட்சியில் புகார் அளித்துள்ளார். இதன் தொடர்ச்சியாக அந்த வார்டில் தூய்மை பணிக்காக சென்ற தூய்மைப் பணியாளர்களை பணி செய்ய விடாமல், கவிதா, அவரது கணவர் புருஷோத்தமன் உள்ளிட்டோர் அங்கு வந்து தகராறு செய்துள்ளனர். தொடர்ந்து, கவுதமை, எங்கள் கட்சிக்கு ஓட்டு போட்டியா என கேட்டு கடுமையாக தாக்கியுள்ளனர். இந்த தாக்குதலில் இளைஞர் கவுதமின் கழுத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

தெருவை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என போராடிய இளைஞரை தாக்கிய காங்கிரஸ் கவுன்சிலர் கவிதா மற்றும் அவரது கணவர் மீது காவல்துறையினர் உரிய நடவடிக்கை எடுப்பதுடன் அவர்களை கைது செய்ய வேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது.

அரசு பள்ளிகளுக்கு பாடப் புத்தகங்கள் அனுப்பும் பணி நிறைவு

● **கோவை**

கோவை மாவட்டத்தில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு பாடப்புத்தகங்கள் அனுப்பும் பணி பெரும்பாலும் முடிந்துவிட்டது என பள்ளிக்கல்வித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் கோடை விடுமுறை முடிந்து, ஜூன் 10-ம் தேதி பள்ளிகள் திறக்கப்பட உள்ளன. இதையடுத்து, கோவை மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் அனைத்துவகுப்பறைகள், பள்ளி முதல்வர் அறை, ஆய்வகம், கழிப்பறை உள்ளிட்டவற்றை தூய்மைப்படுத்தும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. கழிவுநீர் தொட்டிகள் மூடப்பட்டு உள்ளதா? என்பதை சரிபார்க்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

இதனிடையே, தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் கோவை மாவட்டத்துக்கு தேவையான பாடப்புத்தகங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. ராமநாதபுரம், 80 அடி சாலையில் உள்ள மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் 1 முதல் 5-ம் வகுப்பு மாணவர்களுக்கும், ஒண்டிப்புதூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, குனியமுத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளி, ராமநாதபுரம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய மூன்று பள்ளிகளில் 6 முதல் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களும் இருப்பு வைக்கப்பட்டு, பள்ளிகளுக்கு அனுப்பும் பணி நடைபெற்று வந்தது. இப்பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன.

இதுகுறித்து பள்ளிக்கல்வித் துறை அதிகாரிகள் கூறும்போது, "கோவை மாவட்டத்தில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு பாடப் புத்தகங்கள் அனுப்பும் பணி பெரும்பாலும் முடிந்துவிட்டது" என்றனர்.

↑ கோவை வெரைட்டி ஹால் சாலையில் உள்ள சிட்டி மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாகத்தை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள்.

படம்: ஜெ.மனோகரன்

அரசு வேலை வாங்கி தருவதாக கூறி

ரூ.22 லட்சம் மோசடியில் ஈடுபட்ட தம்பதி உட்பட 3 பேர் கைது

● **கோவை**

கோவை அருகே அரசு வேலை வாங்கித் தருவதாகக் கூறி ரூ.22 லட்சம் மோசடி செய்த வழக்கு தொடர்பாக தம்பதி உட்பட மூவரை போலீஸார் கைது செய்தனர்.

கோவை மாவட்டம் கருமத்தம்பட்டியைச் சேர்ந்தவர் நாகராஜ். இவர், அதே பகுதியில் பெயின்ட் விற்பனைக் கடை நடத்தி வருகிறார். இவர், கோவை மாவட்ட குற்றப்பிரிவு போலீஸாரிடம் சில தினங்களுக்கு முன்னர் புகார் மனு அளித்தார்.

அதில், 'நான் சில வாரங்களுக்கு முன்னர் எனது கடைக்கு கருமத்தம்பட்டியைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் (34), அவரது மனைவி சாய்ஶ்ரீ (24), இவர்களது உறவினர் பெருமாள்சாமி (69) ஆகியோர் வந்தனர்.

என் மகன் வேலை தேடி வருவதை அறிந்த கிருஷ்ணகுமார் உள்ளிட்ட மூவரும், ரூ.1.60 லட்சம் கொடுத்தால், எனது மகனுக்கு அரசு வேலை வாங்கித் தருவதாக கூறினர். இதை நம்பி நானும் ரூ.1.60 லட்சத்தை 3 பேரிடமும் அளித்தேன். ஆனால், மூவரும் கூறியபடி வேலை வாங்கித் தரவில்லை. இவர்கள் மீது போலீஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என கூறப்பட்டிருந்தது. மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் வழக்கு பதிந்து, 3 பேரையும் தேடி வந்தனர். இந்நிலையில், 3 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக போலீஸார் கூறும்போது, "3 பேரும் கருமத்தம்பட்டி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தொடர்ந்து வேலை வாய்ப்பு முகாம்களை நடத்தி, பலரிடம் பணம் வசூலித்துள்ளனர். அரசு வேலை வாங்கித் தருவதாகக் கூறி 9 பேரிடம் ரூ.22.50 லட்சம் பணம் வசூலித்து மோசடி செய்தது விசாரணையில் தெரியவந்தது. 3 பேரையும் கைது செய்து விசாரித்து வருகிறோம்" என்றனர்.

பயறு வகை சாகுபடியை அதிகரிக்க ரூ.49 லட்சம் நிதி ஒதுக்கீடு

▶ விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள அழைப்பு

● **கோவை**

கோவை மாவட்டத்தில் பயறு வகைச் சாகுபடியை அதிகரிக்க ரூ.49 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, கோவை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கு.பெருமாள்சாமி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

கோவை மாவட்டத்தில் சராசரியாக 8,608 ஹெக்டேர் பரப்பளவில் துவரை, உளுந்து, பச்சைப் பயறு, கொள்ளு, கொண்டைக்கடலை, தட்டை, அவரை மற்றும் பல்வேறு பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இந்த பயறு வகைப் பயிர்கள் குறுகிய காலமுடையதாகும். குறைந்த நீர் தேவை கொண்ட பயிராகும். இதற்கு 250 மில்லி மீட்டர் அளவு கொண்ட நீர் போதுமானதாகும். பயறு வகைச் செடிகள் அறுவடைக்கு பின்னர், கால்நடைகளின் தீவனத்துக்கு ஏற்றதாகும்.

பயறு வகைகள் அதிக புரதச்சத்து கொண்டதாகும். மாவுச்சத்து, கொழுப்பு, சுண்ணாம்பு, இரும்பு, நார்ச்சத்து ஆகியவையும் இதில் உள்ளது. இவை தழைச்சத்தை வேர் முடிச்சுகளில் சேமித்து பயிர்களுக்கு வழங்கக்கூடியவை ஆகும். கோவை மாவட்டத்தில் பயறு வகை சாகுபடியை அதிகரிக்க ரூ.49 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் உளுந்து செயல்விளக்கத் திடல்கள் ஹெக்டேருக்கு ரூ.8,500 மற்றும் விதைகள், பயறு நுண்ணூட்டம், டிரைகோடெர்மா விரிடி, திரவ உயிர் உரங்கள், அசோடிரேக்டின் ஆகியவை மானியத்தில் வழங்கப்படுகின்றன.

கொண்டைக்கடலை செயல் விளக்கத் திடல் ஹெக்டேருக்கு ரூ.90 மானியத்தில் 75 கிலோ விதை மற்றும் பயறு நுண்ணூட்டம் 5 கிலோ வழங்கப்படுகிறது. வீரியம் மிக்க உளுந்து, கொண்டைக்கடலை, தட்டை விதைகள் 50 சதவீதம் மானியத்தில் அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.50 வழங்கப்படுகிறது.

வீரியம்மிக்க கொண்டைக் கடலை, உளுந்து, தட்டை விதைகளை உற்பத்தி செய்து தரும் விவசாயிகளுக்கு கிலோவுக்கு ரூ.25 ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. பயிர்களின் செயல்திறனை அதிகரிக்க நுண்ணூட்டங்களை வழங்க, ஹெக்டேருக்கு 5 கிலோ கிராம் பயறு நுண்ணூட்டம் 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகிறது.

காற்றிலுள்ள தழைச்சத்தை பயிரில் நிலைநிறுத்தவும், கரையாத மணிச்சத்தை கரைக்கவும் சாம்பல் சத்தினை பயிருக்கு கிடைக்கச் செய்யக்கூடிய திரவ உயிர் உரங்கள் 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகிறது.

இதுகுறித்த மேலும் விவரங்களுக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களை விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம்.

தொண்டாமுத்தூர் அரசு கல்லூரியில்

360 இடங்களுக்கு 6,000 பேர் விண்ணப்பம்

● **கோவை**

தொண்டாமுத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உள்ள 360 இடங்களில் சேர 6,032 பேர் விண்ணப்பம் செய்துள்ளனர்.

கோவையை அடுத்த தொண்டாமுத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இளநிலை படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு ஆன்லைன் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, மே 27-ம் தேதி தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டது. மொத்தம் 6 இளநிலை பாடப் பிரிவுகளில் 360 இடங்களில் சேர மொத்தம் 6,032 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இதைத்தொடர்ந்து சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. பொதுப்பிரிவினருக்கான கலந்தாய்வு ஜூன் 10-ம் தேதி பி.ஏ. ஆங்கில இலக்கியம் மற்றும் பி.எஸ்சி. கணிதப் பாடப்பிரிவுகளுக்கும், மறுநாள் (ஜூன் 11) பி.காம். (சிஏ), பி.காம் (பிஏ) வணிகவியல் பி.ஏ. பொருளியல் மற்றும் பி.பி.ஏ. பாடப்பிரிவுகளுக்கும் கலந்தாய்வு நடைபெற உள்ளது.

முதலாண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் வரும் ஜூலை 3-ம் தேதி தொடங்க உள்ளதாக கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பொள்ளாச்சி உழவர் சந்தையில் ரூ.1.62 கோடிக்கு காய்கறி விற்பனை

● **பொள்ளாச்சி**

பொள்ளாச்சி நகராட்சி அலுவலகம் அருகே உழவர் சந்தை செயல்பட்டு வருகிறது. இங்கு மொத்தம், 80 கடைகள் உள்ளன. பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, சுல்தான்பேட்டை, ஆனைமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் அடையாள அட்டை பெற்றுள்ள 300-க்கும் மேற்பட்ட விவசாயிகள், உழவர் சந்தையில் காய்கறி விற்பனை செய்து வருகின்றனர்.

காய்கறிகளை விவசாயிகள் நேரடியாக விற்பனை செய்வதால் உழவர் சந்தையில் காய்கறிகள் வாங்க மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதுகுறித்து உழவர் சந்தை அதிகாரிகள் கூறும்போது, "கடந்த மாதம் நாளொன்றுக்கு 14 ஆயிரத்து 222.58 கிலோ காய்கறிகள் விற்பனைக்கு வந்தன. ரூ.5 லட்சத்து 22 ஆயிரத்து 598 மதிப்பிலான காய்கறிகள் விற்றுத் தீர்ந்தன. 60 விவசாயிகளும், 2844 நுகர்வோரும் பயன்பெற்றுள்ளனர். கடந்த மாதம் மொத்தம் 440.9 மெட்ரிக் டன் காய்கறி வரத்து இருந்தது. இவற்றின் மொத்த விற்பனை மதிப்பு ரூ.ஒரு கோடியே, 62 லட்சத்து, 555 ஆகும். மொத்தம் 1,870 விவசாயிகள், 88 ஆயிரத்து 180 நுகர்வோர் பயன்பெற்றனர்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

புகையிலை எதிர்ப்பு தினத்தையொட்டி கோவையில் விழிப்புணர்வு பேரணி

● **கோவை/பொள்ளாச்சி**

உலக புகையிலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை சார்பில் விழிப்புணர்வு பேரணி மற்றும் கையெழுத்து இயக்கம் நிகழ்வு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி பேரணியை தொடங்கி வைத்தார்.

இந்த ஆண்டு 'புகையிலை தயாரிப்பு நிறுவனங்கள் தாக்கத்தில் இருந்து குழந்தைகளை பாதுகாப்போம்' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இந்நிகழ்வு நடைபெற்றது. தனியார் செவிலியர் பயிற்சி கல்லூரிகள், தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை சேர்ந்த 250-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பேரணியில் பங்கேற்றனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கிய பேரணி, ரேஸ்கோர்ஸ் பகுதியில் அமைந்துள்ள துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) அலுவலகம் அருகே நிறைவடைந்தது. புகையிலைப் பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி பேரணியில் மாணவர்கள் பங்கேற்றனர். முன்னதாக, உலக புகையிலை எதிர்ப்பு தின உறுதிமொழியை மாணவ, மாணவிகள் ஏற்றுக்கொண்டனர்.

"புகையை பிடிக்காதே புன்னகையை இழக்காதே"

↑ உலக புகையிலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் பங்கேற்றோர்.

படம்: ஜெ.மனோகரன்

இதேபோல ஆனைமலை அடுத்த பெரியபோது வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புகையிலை எதிர்ப்பு தின விழிப்புணர்வு மற்றும் உறுதிமொழி ஏற்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

மருத்துவர் கிருத்திகா தலைமை வகித்தார். மருத்துவர்கள் சீதாலட்சுமி, கிருத்திகா, ஆயுர்வேத மருத்துவர் சிவதாஸ் ஆகியோர் பங்கேற்று புகையிலையின் தீமைகள் குறித்து பேசினர்.

இந்நிகழ்ச்சியில் வட்டார மருத்துவம் சாரா மேற்பார்வையாளர் செல்லதுரை, சுகாதார ஆய்வாளர்கள் அருணாச்சலம், கோகுல், சரத், சண்முகபிரியன் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு புகையிலை எதிர்ப்பு தின உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

ujjivan SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.1789-A, சக்ரவர்த்தி டவர், திருச்சி ரோடு, ஒலிம்பஸ், ராமசாமி நகர், புலியாகுளம், ராமநாதபுரம், கோயம்புத்தூர் - 641045

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்/ அடமானதாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை in INR	டேவணித்தொகை (EMD) in INR
1186210080000019 1.Mr. சரவணகுமார் 2.Mrs.ரேணுகாதேவி	(i) 04.12.2021 02.12.2021 அன்றுள்ளபடி ₹ 6,83,126/- (ரூபாய் ஆறு லட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து நூற்று இருபத்து ஆறு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் 12.12.2022 & நேரடியான சுவாதீனம் 05.03.2024	06.05.2024 அன்றுள்ளபடி ₹ 12,25,865/- (ரூபாய் பன்னிரெண்டு லட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று அறுபத்து ஐந்து மட்டும்)	₹ 10,60,800/- (ரூபாய் பத்து லட்சத்து அறுபதாயிரத்து எண்ணூறு மட்டும்).	₹ 1,06,080/- (ரூபாய் ஒரு லட்சத்து ஆறாயிரத்து எண்பது மட்டும்)

சொத்து விவரம் : கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், தொண்டாமுத்தூர் சார் பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட **நத்தம் S.F.எண்.429/5, தீத்திபாளையம் கிராமம்** என்னும் முகவரியில் அளவுகள்: கிழக்கு மேற்காக இரு திசையிலும் 9.2 மீட்டர், வடக்கு தெற்காக இரு திசையிலும் 11.4 மீட்டர், மொத்தம் **1130 சதுர அடி நிலம் மற்றும் அதனுடன் RCC கட்டிடம்** மற்றும் மின்சார இணைப்பு மற்றும் தண்ணீர் குழாய் இணைப்புகள் மற்றும் டெபாசிட்டுகள் மற்றும் அனைத்து இதர உபகரணங்கள், பொருத்தப்பட்டுள்ளவைகள், அதனுடன் வழிப்பாதை உரிமை மற்றும் அனுமந்த உரிமைகள், **கதவு எண்.7/118,** மதிப்பீடு எண்.1269 WTC No. 1490 SC No. 465. அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: ரெங்கன் சொத்துக்கு வடக்கு, ராமன் சொத்துக்கு கிழக்கு, கிழக்கு மேற்கு ரோடுக்கு தெற்கு, ரெங்கன் சொத்துக்கு மேற்கு..

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 17.07.2024 காலை 11.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி:	சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்:
16.07.2024 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	15.07.2024 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.G.நடராஜன்: Mob: 95512 77444 / Mr.R.புஷ்பகாந்த்: Mob: 98431 14222

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. **(தொடர்புக்கு: Mr.பிரபாகரன் Mob: 74182 81709)** உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

தேதி: 01.06.2024
இடம்: பெங்களூரு

rakesh.sridhar@hindutamil.co.in